17.03.2026

O.S.No. 58/2021

PW2– கருத்தப்பாண்டி – த/பெ. சுடலைமாடன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.03.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. வா.சா.1 எனது தாய் என்றால் சரிதான். 1 முதல் 4 வாதிகளும் சேர்ந்து பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரே பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் சரிதான்.

2. பிரதிவாதிகள் எங்கள் இடத்திற்கு வடக்கு திசையில் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளதால் அதை நீக்கரவு செய்வதற்கு தாக்கல் செய்துள்ளோம். என்னால் ஆக்கிரமிப்பின் அளவுகளை குறிப்பிட்டு கூறஇயலாது.

3. நீதிமன்ற ஆணையர் ஸ்தல பார்வை செய்யும்போது நான் உடனிருந்தேன். ஆணையர் அறிக்கை தாக்கல் செய்து அதில் ஆக்கிரமிப்பு இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் நாங்கள்தான், பிரதிவாதி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியை தனி தபசிலாக காட்டவில்லை என்றால் சரிதான். எனது வழக்கிற்கு எந்த முகாந்திரமும் கிடையாது என்றாலும், பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிப்பதற்காக வம்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

5. நான் பிராதில் சொல்லாத புது சங்கதிகளை முதல்விசாரணை பத்தி எண்.3 ல் 5 வது வரியில் இருந்து 4 வதுபத்தி முழுவதும் பிராதில் குறிப்பிடதாக சங்கதிகள் என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

6. மறுவிசாரணை இல்லை

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai